நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible] மன்றம்
யாழ்ப்

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்களின் நாளேடு | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஐப்பசி 12 | [28-10-1993] | வியாழக்கிழமை | ஓசை 253

## நீதி நிர்வாக நடவடிக்கையில் இணைந்துகொள்ள அழைப்பு

தமிழீழ நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகளில் தொடர்புடையவர்கள், விருப்பமுள்ளவர்களில், சமாதான நீதிபதிகள், மொழிபெயர்ப்பாளர்கள், நில அளவையாளர்கள் அவ்வப்பகுதியில் இயங்கும் நீதிமன்றங்களில் எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம் என நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்துள்ளார். நீதி நிர்வாக நடுவப்பணியகத்தில் நேற்று நடந்த சந்திப்பில் பெரும்தொகையான சமாதான நீதிபதிகள், நில அளவையாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் முன்னிலையில் அவர் கருத்துக் கூறுகையில்; இன்று எதிரியின் அழிப்புகளின் மத்தியிலும் எமது மண்ணையும், மக்களையும் (4ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் யுத்தம் நீடிக்கும் வரை பொருளாதாரத்தில் மீட்சி இல்லை

## பினான்சியல் ரைம்ஸ் தெரிவிப்பு

(லண்டன்)

**இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் யுத்தம் அதன் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. இப் போர் தொடர்ந்தும் நடைபெறுமானால், அது பொருளாதாரத்தில் முன்னேற்றத்தையோ அன்றி பொருளாதாரத் துறையில் எய்தவேண்டிய இலக்கையோ ஒருபோதும் அடையமுடியாது என லண்டனில் இருந்து வெளிவரும் பினான்சியல் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.**

இலங்கையின் பொருளாதாரம் பற்றிய எட்டுப் பக்க கட்டுரை அனுபந்தம் ஒன்றை வெளியிட்டுள்ள பினான்சியல் ரைம்ஸ் போரின் முடிவிலேயே இலங்கையின் பொருளாதார விடிவு உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு வருமானத்தில் கணிசமான அளவு போருக்காக ஒதுக்கப்படுவதாகக் கூறும் பினான்சியல் ரைம்ஸ் போர் தொடரும்வரை வெளிநாட்டு முதலீடு இலங்கைக்குள் வரமாட்டாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த பின்னரே அது தனது பொருளாதாரத் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் என பினான்சியல் ரைம்சில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பு செலவினம் அதிகரித்துச் சென்றபோதும் யுத்தத்திற்குத் தேவையான நவீன ரக ஆயுதங்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டடக்கலை விண்ணப்பமுடிவு நீடிப்பு

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக் கழக கல்வியாண்டு 1993/94 கட்டடக்கலை விஞ்ஞான மாணிக் கற்கைநெறி தேர்வுப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் நொவம்பர் 5 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நேற்றுடன் முடிவடைந்தது என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

[நல்லூர்]

பள்ளிக்குடாவில் உள்ள சிறிலங்கா இராணுவம் நேற்றைய தினம் இப்பகுதிக் கடலேரியில் உள்ள பெரிய வேலி என்னுமிடத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி பல தடவை ஷெல் வீச்சுக்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துள்ளது.

இதன்காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கைவிட்டு கரைதிரும்பியுள்ளார்கள். [17]

## கொழும்பு பஸ்களில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுக்குச் செல்லும் பஸ்கள் மற்றும் மினிபஸ்கள் ஆகியன திடீர் திடீரென வழிமறிக்கப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் தமிழர்கள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கொழும்பிலுள்ள கொட்டாஞ்சேனை, நீர்கொழும்பு, முகத்துவாரம், செட்டித்தெரு, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளூடாக செல்லும் போக்குவரத்துசபை பஸ்களும் தனியார் மினிபஸ்களுமே மிகவும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் குறிப்பாக 102, 155ஆம்இலக்கபஸ்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## விஜேதுங்கவின் அமைச்சு அநுராவுக்கு கிடைக்கும்?

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வகிக்கும் ஆறு அமைச்சுகளின் பொறுப்புகளில் ஒன்று அநுராவுக்கு வழங்கப்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அநுரா பண்டாரநாயக்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு பிரதி அமைச்சராக இருக்கும் ஏ ஜே ரணசிங்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைவிட்டு விலக தயாராகவுள்ளதாகவும் தெரியவருகின்றது

இன்னும் ஓரிரு தினங்களில் கொழும்புவரும் அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கட்சியின் ஏனைய தலைவர்களுடன் இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அநுராவின் அமைச்சர் பதவி ஐ. தே. க. தீர்மானிக்கும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிபபு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா ஐ தே. கவில் இணைய சம்மதித்துள்ளதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வரவேற்றுள்ளார். அநுராவின் வரவு ஐ. தே. கவிற்கு பலம் சேர்க்கும் என்று கூறிய பிரதமர் ரணில் அமைச்சர் பதவி அநுராவுக்கு வழங்குவது குறித்து ஐ. தே. கவே தீர்மானிக்கும் என்றார்.

அநுரா ஐ தே. கவில் சேர்ந்ததினால் தனது எதிர்கால

## வடபகுதிக்கு செல்வதற்கு 'விசா' போன்ற நடைமுறை

### ராவய செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிற்குள் நுழையும் போது அல்லது நாட்டைவிட்டு வெளியேறும் போது மேற்கொள்ளப்படும் சோதனைகள் போன்றே வவுனியா இராணுவ காவலரண்களில் இப்பொழுது சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென ''ராவய'' செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

''வடபகுதிக்குச் செல்லும்போது நாம் அனுமதி பெற முயற்சித்தபோதும் வேறொரு நாட்டுக்குச் செல்லும்போது விசா எடுப்பதுபோல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது.

சிறிலங்காவின் இறுதி இராணுவச் சோதனைச் சாவடியில் சோதனையை முடித்துவிட்டு ஈழம் பகுதிக்குள் சென்று இராணுவத்தினருக்கு கையசைத்துவிட்டுச் சென்றபோது அவர்கள் குழுமிநின்று எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர் என மேலும் அச் செய்தியாளர் தெரிவித்தார்.

## சிறிலங்கா ராணுவம் குறித்து நோர்வே பத்திரிகை விமர்சனம்

[ஒஸ்லோ]

விடுதலைப்புலிகளுடனான போரில் இராணுவம் களைத்துவிட்டது என நோர்வே பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. சிறிலங்கா இராணுவம் பத்தாயிரம் பேரை தம் ஆயுதப்படையில் சேர்த்து படை பலத்தை ஒரு லட்சத்திற்கு அதிகமாக்கியும் புலிகளுக்கு எதிராக ஓர் முழு அளவிலான தாக்குதலை மேற்கொள்ள முடியாது உள்ளது என்பது பரவலான கருத்து. இவ்வாறு நோர்வே பத்திரிகையான 'அபேயிட பிளடற்ஸ்' எனும் தினசரியில் பில்பஸி எனும் செய்தியாளர் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படைகள் களைத்துவிட்டன என்ற தலைப்பிலான இக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 'சிறி

( 4 ஆம் பக்கம் பார்க்க)

பாக்கி வேட்டுக்களையும் தீர்த்துள்ளது.

இதன்காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கைவிட்டு கரைதிருப்பியுள்ளார்கள். [17]

வெளியிட்டுள்ள பினான்சியல் ரைம்ஸ் போரின் முடிவிலேயே இலங்கையின் பொருளாதார விடிவு உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு வருமானத்தில் கணிசமான அளவு போருக் ... நாட்டு முதலீடு இலங்கைக்குள் வரமாட்டாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த பின்னரே அது தனது பொருளாதாரத் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த முடியும் என பினான்சியல் ரைம்ஸில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவையான நவீன ரக ஆயு ... விக்கப்பட்டுள்ளது.

தென ''ராவய'' செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

''வடபகுதிக்குச் செல்லும்போது நாம் அனுமதி பெற முயற்சித்தபோதும் வேறொரு ... விட்டுச் சென்றபோது அவர்கள் குழுமிநின்று எங்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர் என மேலும் அச் செய்தியாளர் தெரிவித்தார்.

படைகள் ளைத்துவிட்டன

## கொழும்பு பஸ்களில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுக்குச் செல்லும் பஸ்கள் மற்றும் மினிபஸ்கள் ஆகியன திடீர் திடீரென வழிமறிக்கப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் தமிழர்கள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கொழும்பிலுள்ள கொட்டாஞ்சேனை, நீர்கொழும்பு, முகத்துவாரம், செட்டித்தெரு, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளூடாக செல்லும் போக்குவரத்துசபை பஸ்களும் தனியார் மினிபஸ்களுமே மிகவும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் குறிப்பாக 102, 155ஆம்இலக்கபஸ்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## விஜேதுங்கவின் அமைச்சு அநுராவுக்கு கிடைக்கும்?

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வகிக்கும் ஆறு அமைச்சுகளின் பொறுப்புகளில் ஒன்று அநுராவுக்கு வழங்கப்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அநுரா பண்டாரநாயக்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு பிரதி அமைச்சராக இருக்கும் ஏ ஜே ரணசிங்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைவிட்டு விலக தயாராகவுள்ளதாகவும் தெரியவருகின்றது

இன்னும் ஓரிருதினங்களில் கொழும்புவரும் அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கட்சியின் ஏனைய தலைவர்களுடன் இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அநுராவின் அமைச்சர் பதவி ஐ. தே. க. தீர்மானிக்கும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா ஐ தே. கவில் இணைய சம்மதித்துள்ளதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வரவேற்றுள்ளார். அநுராவின் வரவு ஐ. தே. கவிற்கு பலம் சேர்க்கும் என்று கூறிய பிரதமர் ரணில் அமைச்சர் பதவி அநுராவுக்கு வழங்குவது குறித்து ஐ. தே. கவே தீர்மானிக்கும் என்றார்.

அநுரா ஐ தே. கவில் சேர்ந்ததினால் தனது எதிர்காலத்தை பாழடித்து விட்டார் எனவும் மக்களிடம் இருந்த சிறிதளவு ஆதரவையும் அநுரா இழந்துவிட்டதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இதுபோன்ற கட்சித் தாவல்கள் இனப்பிரச்சினையில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ராணுவம் குறித்து நோர்வே பத்திரிகை விமர்சனம்

[ஒஸ்லோ]

விடுதலைப்புலிகளுடனான போரில் இராணுவம் களைத்துவிட்டது என நோர்வே பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

சிறிலங்கா இராணுவம் பத்தாயிரம் பேரை தம் ஆயுதப்படையில் சேர்த்து படை பலத்தை ஒரு லட்சத்திற்கு அதிகமாக்கியும் புலிகளுக்கு எதிராக ஓர் முழு அளவிலான தாக்குதலை மேற்கொள்ள முடியாது உள்ளது என்பது பரவலான கருத்து. இவ்வாறு நோர்வே பத்திரிகையான 'அபேயிட பிளடற்ஸ்' எனும் தினசரியில் பில்பஸி எனும் செய்தியாளர் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

படைகள்களைத்துவிட்டன என்ற தலைப்பிலான இக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 'சிறி

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்கல்வி அனுமதி மறுப்பு; இன்று மாணவர் பேரணி

(நமது நிருபர்)

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திட்டமிட்ட வெட்டுப்புள்ளி நடவடிக்கையைக் கண்டித்தும் நியாயம் வழங்கக் கோரியும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று காலை திட்டமிட்டபடி யாழ்நகரில் நடைபெறவுள்ளது.

1991 / 92 கல்வி ஆண்டு வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டின் பேரில் நடைபெறவுள்ள இவ் ஊர்வலத்திற்கு ஆதரவாக பல்கலைக்கழகம், பாடசாலை, தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் தத்தமது கல்வியை கைவிட்டு இன்று இப் பேரணியில் கலந்துகொள்கின்றனர்.

இப் பேரணி இன்று காலை 9 00 மணிக்கு யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து புறப்பட்டுகந்தர்மடம் சந்தியூடாக நல்லூரை அடைந்து கோவில் வீதி வழியாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அலுவலகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் ஊடாக யாழ். செயலகத்தை அடையும் அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதியூடாக யாழ். கல்வித் திணைக்களம் சென்று நல்லூர், கோயில் வீதி, பரமேஸ்வரா சந்தியூடாக யாழ். பல்கலைக் கழகத்தை வந்தடையும். இதில் கலந்துகொள்ளும் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்குமான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இன்று அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி ஒத்துழைக்கும்படி தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது

(4ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கியது

யாழ். தட்டாதெரு பகுதியில் கைத் தொழில் நிறுவனமொன்றில் மின்னல் தாக்கியதால் அங்கு வேலை செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் பாதிக்கப்பட்டார். மேலும் மூன்று பெண்கள் சிறிது நேரம் கேட்கும் சக்தியை இழந்தனர்.

நேற்று பிற்பகல் 2 30மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பத்மலோஜினி (வயது21) என்பவரே பாதிக்கப்பட்டவர் ஆவார். மேலும் இந் நிறுவனத்தின் வளவிலுள்ள பனைமரம் ஒன்றும் முறிந்து வீழ்ந்தது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வீடியோ திரைப்படங்களை தணிக்கை செய்ய குழு அமைப்பு

வீடியோ நாடாக்கள் மூலம் வெளியிடப்படும் திரைப்படங்களைத் தணிக்கை செய்யவென விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் தணிக்கைக் குழு ஒன்றை அமைத்துள்ளது

இதுதொடர்பாக கலைபண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்;

எமது பண்பாட்டைச் சீர்குலைப்பனவாகவும், போராட்ட எண்ண உணர்வலைகளை மழுங்கடிப்பனவாகவும் அண்மைய திரைப்படங்கள் பலவும் காணப்படுகின்றன. இந்த இந்தியத் தமிழ்ச் சினிமாப் படங்கள் எமது சமூகத்தையே சீரகேட்டுக்கு ஆளாக்குகின்றன. இந்தப் படங்களின் பெருக்கம் வீடியோ சாதனம் மூலமாக இங்கு அதிகரித்துள்ளது. எனவே இவற்றைக் கவனத்திற் கொண்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஒரு புதியவிதிமுறையை நடைமுறைப்படுத்த வுள்ளது. இதன்படி தமிழீழத்தில் புதிதாக கொண்டுவந்து வெளியிடப்படும்வீடியோ (சினிமா)ப் படங்களை விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பரிசீலித்து அனுமதி வழங்கும். இதற்கென கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் தணிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தணிக்கைக் குழு புதிய படங்களைப் பார்வையிட்டுப் பரிசீலித்து அனுமதி வழங்கிய பின்பே அவை வீடியோப் பிரதிகளை இரவல் கொடுக்கும் நிலையங்களால்வாடகைக்குக்கொடுப்பதற்கு அனுமதிக்கப்படும். இந்த விதிமுறையை மீறுபவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கையை மேற்கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமருக்கு சிறிலங்கா ஜனாதிபதி செய்தி

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவிற்கான சிறிலங்கா ஜனாதிபதி டி. பீ. விஜேதுங்கவின் செய்தியொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சைப்பிரசில் வைத்து இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங்கிடம் வழங்கினார். இத் தகவலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

சைப்பிரசில் நடந்த பொதுநலவாய மாநாட்டில் வைத்து இச்செய்தி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## இரு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள் கையிருப்பில்

யாழ். மாவட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்கு தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் தெரிவித்தார்.

கப்பல் சேவைகள் இடைநிறுத்தப் படவுள்ளதாகவும், உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் வெளிவந்த செய்திகளை அடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையானஅளவு அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்கள் யாழ். செயலகத்திடமும், தனியார் துறையினரிடமும் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச),(பா)

## விடுதலைப்போரை அங்கீகரிக்க அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை

(கன்பரா)

தமிழீழ விடுதலைப் போரை அங்கீகரிக்குமாறு அவுஸ்திரேலியா அரசிற்கு அவுஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்திய தமிழர் ஒருங்கிணைப்பு குழு பிரதிநிதிகள் கடந்த மாத ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அன்ரூ பீக்கொக்கையும் சந்தித்து பேசியிருந்தனர்.

அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. இச்சந்திப்பிலேயே தமிழீழ போராட்டத்தை அங்கீகரிக்குமாறு அவர்கள் அவுஸ்திரேலிய அரசை கோரினர். விடுதலைப் புலிகளுடன் அரசு நேரடியாக பேச்சு நடத்த உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

அவ்வாறான நடவடிக்கைகளை இராஜீக முறையிலும், சிறிலங்கா அரசு மீதான பொருளாதாரத்தடை ஆயுத விற்பனை தடை ஆகியவற்றை அமுலாக்குவதன் மூலமும் இராணுவ முற்றுகையிலுள்ள தமிழருக்கு நேரடியாக உதவி வழங்குவதன் மூலமும் மேற்கொள்ளும்படி இவர்கள் கோரினர்.

## பாதிக்கப்பட்ட மீனவருக்கு அருத்தமாதம் நிவாரணம்

கடல்வலய தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது

கடந்த சில வருடங்களாக சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் தொழிலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமக்கு நிவாரணம் வழங்கக்கோரி பலதடவைகள் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர்கள் அனுப்பியமை தெரிந்ததே.

யாழ். மாவட்டத்தில் மேற்படி கடல்வலய தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட 9653 குடும்பங்களுக்கு இவ் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் தெரிவித்தார். இம் மீனவர்களுக்கும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் போன்றே நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இவ்வாறு தொழிலிழந்த மீனவர்களுக்கான நிவாரணம் அடுத்த மாதம் முதல் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தங்கையே !

அடு பங்கரையில் உறங்கிக் கிடந்து
அழிந்தது போதும் எழுவாய்
விடுதலை தேடும் புலிகளின் பாசறை
வீடுகள் தேடி வருவாய்

## வரி விளம்பரம்

### காணவில்லை

24-10-93 ஞாயிற்றுக் கிழமை பி. பகல் 4 மணிக்கும் 4-30 மணிக்குமிடையில் பெண்களுக்கான கைச்சங்கிலி ஒன்று தவறி விழுந்துவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது மாறன் பதிப்பகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(6397)

### "நீம் சுகாதார தூபம்"

"நீம் சுகாதார தூபம் நித்தம் புகைப்பதால் நுளம்புத் தொல்லை எமக்கில்லை. பக்க விளைவு ஏதும் இல்லை. இரவில் நிம்மதியாக உறங்குகிறோம். சுகந்த வாசனை கொண்டது நீம். அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது பக்கற் ரூபா. 3/- "மில்க்வைற்" (சி/7791)

### புலமைப்பரிசில் பயிற்சி

புதிய கல்வி நிலையத்தால் விஜயதசமியன்று வெளியிடப்பட்ட 21 கட்டுரைகளையும், 10 மாதிரிப் பயிற்சிகளையும் கொண்ட புலமைப் பரிசில் பயிற்சி நூலை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். எம்மிடம் நேரடியாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.
(6408)

### பண்டித வகுப்புகள் மீண்டும் ஆரம்பம்

நாட்டு நிலை காரணமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பண்டிதர் வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணைப்படி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுகின்றன.

### ஆங்கில தினப் போட்டிகள்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திற்கான ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை எட்டு மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. முதல் நாளில் எழுத்துப் போட்டிகளும், இரண்டாம் நாளில் பேச்சு மற்றும் மனனப் போட்டிகளும் இடம்பெறவுள்ளது. கொத்தணி மட்டத்தில் முதலாம். இரண்டாம் இடங்களைப் பெறுவோர் கோட்ட மட்டப்போட்டியில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

## பழைய பஸ் நிலையத்தில் பொது வசதிகட்டட தொகுதி

(நமது நிருபர்)

யாழ். மாநகரசபையினால் பழைய யாழ் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட பொது வசதிக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல வசதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட இக்கட்டடத் தொகுதியில் மலகூடம், குளியல் அறை, பொருள்களை பாதுகாப்பாக பூட்டிவைக்கும் அறை என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடத் தொகுதியைப் பாவிக்கும் பாவனையாளர்கள் மலகூடத்திற்கு ரூபா ஒன்றும், குளியலறைக்கு ரூபா ஐந்தும், பொருள்களைப் பாதுகாப்பாக பூட்டி வைக்கும் அறைக்கு (ஆறு மணித்தியாலங்களுக்கு மேற்படாமல்) ரூபா இரண்டும் செலுத்த வேண்டும் என யாழ். மாநகர சபை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. [பா]

## கை முறிந்தது

உயரமான மாமர மொன்றில் இருந்து தவறுதலாக விழுந்த சிறுவன் ஒருவன் கை முறிந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது குணசிங்கம் செல்வரூபன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு கை முறிந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்
(86)

## பனை அபிவிருத்திச் சபை

மரம் நடுகை வாரம் (26.10.93 - 01.11.93)

### பனம் விதை நடுகை

மரம் நடுகை வாரத்தையொட்டி, யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனம் விதைகள் நடுகை இயக்கத்தைச்சபை மேற்கொண்டுள்ளது. விதைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள விரும்பும் சமூக சேவை ஸ்தாபனங்கள், மற்றும் தனியார், உடன் தொடர்பு கொள்ளவும்.

முளைதிறன் உள்ள தரமான பனம் விதைகள் 50 சதவீதம் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:

அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

'பனை வளர்ப்போம்;
பனையால் வளர்வோம்"

[சி/7795]

## தொண்டர் ஆசிரியர் சங்க பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30-10-93 (சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும் இதில் பயிலுனர் நியமனம் கிடைத்த ஆசிரியர்களும் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
செ. பரமேஸ்வரன்

(6385)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09-03-1924

மறைவு: 07-11-1992

திருமதி
**வரதலட்சுமி அம்மா குமாரசாமி**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)
திதி: 28-10-1993


முதலாம் திதி நினைவு நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கிறோம்.

''வரதகோட்டம்"
வட்டு. கிழக்கு
சித்தன்கேணி

மக்களும், மருமக்களும்
பேரப்பிள்ளைகளும்.

(6392)

## நெஞ்சம் நெகிழும் 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா பொன்னுத்துரை**

மண்ணுறவு 22-07-1921

விண்ணுறவு 28-09-1993

நினையாத நேரம் அணைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழவுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எமது குல தெய்வத்தின் ஆத்மா

## 31-ம் நாட்களின் நிறைவில்...

அன்னை மடியில்: 1976-06-29

ஆண்டவன் அடியில் 1993-09-28



**செல்வி யசோதா செல்வராஜா**
(1995 உயிரியல் விஞ்ஞான மாணவி, சா/மகளிர் மகாவித்தியாலயம்)

அமைதியான உந்தன் முகம் அந்த அவலத்தில்
அழிந்து போனதை நம்பமுடியவில்லை நண்பி...
பிரிவு... சீக்கிரமே வந்துவிட்டது. உன் மரணத்தோடு
உன்முகம் நீங்காது நிலைத்துவிட்டது எம் நினைவோடு.


28 09 1993 அன்று இவரோடு அரக்கரின் குண்டினால் பதுங்கு குழிக்குள் புதையுண்டு மரணமடைந்த இவரது தந்தை, தங்கை உட்பட ஏனைய 19 பேர்களிற்கும் எமது அஞ்சலிகள்.

சாவகச்சேரி,
BL. R/1608

விஞ்ஞானக் கல்விக் கழக,
ஆசிரியர்களும், மாணவர்களும்.

6394)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 11-08-1939

மறைவு 29-09-1993

அமரர்
**திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்**
(ஓய்வுபெற்ற இராணுவ வீரர்)

கலையும் கல்வியும் உணவும் ஊட்டிய தலைவரே! எம் தந்தையே! என்றும் எம்மனதில் குடி கொண்ட வேந்தே! தங்கள் பொற்பாதமதை நினைந்து வாழ்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள், பெற்றோர்,
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

(6366)

பேக் கல்லூரியில் நடைபெறு கின்றன.

### ஆங்கில தினப் போட்டிகள்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திற்கான ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் காலை எட்டு மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. முதல் நாளில் எழுத்துப் போட்டிகளும், இரண்டாம் நாளில் பேச்சு மற்றும் மனனப் போட்டிகளும் இடம்பெறவுள்ளது. கொத்தணி மட்டத்தில் முதலாம். இரண்டாம் இடங்களைப் பெறுவோர் கோட்ட மட்டப்போட்டியில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

---

[சி/7795]

---

## தொண்டர் ஆசிரியர் சங்க
# பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30-10-93 (சனிக்கிழமை) காலை 11-00 மணிக்கு யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும் இதில் பயிலுனர் நியமனம் கிடைத்த ஆசிரியர்களும் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
செ. பரமேஸ்வரன்

(6385)

---

உ
சிவமயம்

## புதிய புடவை வாணிபகம்

# திறப்பு விழா அழைப்பு

## எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

# நியூ ஹப்பி ரெக்ஸ்ற்
# NEW HAPPY TEXT



என்னும் புதிய புடவை வாணிபகத் திறப்பு விழா **29. 10. 1993** வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையுமுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு எமக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கி விழா வினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வருக வருக வென அழைக்கின்றோம்,
நன்றி


தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

## நியூ ஹப்பி ரெக்ஸ்ற் ஸ்தாபனத்தினர்

**146, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.**
(வயிரவர் கோவில் அருகாமை)

(6403)

---



அமரர்

## கந்தையா பொன்னுத்துரை

| மண்ணுறவு | விண்ணுறவு |
|---|---|
| 22-07-1921 | 28-09-1993 |

நினையாத நேரம் அணைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எமது குலதெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்னாரது மரணத்தின்போது எமது துயரங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும், பலவழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேஷ்டி சபிண்டிகரண கிரியைகள் இன்று 28-10-93 எனது இல்லத்தில் நடைபெறுகின்றது. அதில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

ஜெகா மோட்டோர்ஸ் உரிமையாளர்
சைவப்பாடசாலை றோட், வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
மனைவி, மக்கள், மருமக்கள்.

[6379]

---

## ஆண்டொன்றும் ஆனதுவோ ...



மலர்வு
05-06-1915

உதிர்வு
08-11-1992

## அமரர் சூரியன் வேலுப்பிள்ளை

(சநதம் புளியடி காரைநகர்)

அன்பின் திருவுருவே! ஆண்டொன்று ஆனதுவோ?
பண்பின் சிகரமே! பாசத்தின் பிறப்பிடமே!
இன்புற்று நாம் வாழ என்றுமே வைத்தவரே!
— இன்று
அன்பான நெஞ்சங்கள் அலைகடலாய் பொங்குவதேன்?

சுதுமலை தெற்கு
ஆனைக்கோட்டை.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6406)

---



11-08-1939

மறைவு
29-09-1993

அமரர்

## திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற இராணுவ வீரர்)

கலையும் கல்வியும் உணவும் ஊட்டிய தலைவரே! எம் தந்தையே! என்றும் எம்மனதில் குடி கொண்ட வேந்தே! தங்கள் பொற்பாதமதை நினைந்து வாழ்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

(6366)

---

## நினைவு கூருகின்றோம்..
## 1993- 10- 28

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் நாவற்குழிப்பகுதியில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சர்வா** [கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம் - புளியம்பொக்கணை - கிளிநொச்சி]

கொந்தக்காரன்குளம் பகுதியில் தேசவிரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சிவகுமார்** [கதிரவேற்பிள்ளை விஜயரத்தினம் - கொந்தக்காரன்குளம் - வவுனியா]

1990ஆம்ஆண்டில் மட்டு - வந்தாறுமூலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சங்கர்** (செல்வரட்ணம் யசோசீலன் - அம்பாறை)

**மேஜர் கண்ணன்** (செல்லையா உதயநாதன்- கொம்மாந்துறை - மட்டு)

**பிருந்தன்** (சாமிநாதன் சந்திரமோகனதாஸ்- செங்கலடி- மட்டு)

மண்முனைத்துறை வாவியில் படகில் சென்று கொண்டிருக்கும் போது சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழ்ப் பயணிகள்.

யாழ். நகர்ப்பகுதி மற்றும் கொக்குவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

முஸ்லிம்களால் கொலை செய்யப்பட்ட - செங்கலடியைச் சேர்ந்த தமிழ் மாணவன். சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கொம்மாந்துறை புதிய வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மட்டு - கிரான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப் விஜே** [கந்தையா வடிவேல் - கிரான்-மட்டு)

இதே சம்பவத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**தேவராஜன்** (கிரான் - மட்டு)

**விஸ்மா** [கிரான் - மட்டு]

1992ஆம் ஆண்டு கிளாலிக் கடற்கரையில் சடலங்களாக கரையொதுங்கிய 2 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7790)

நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அன்போ, பகைமையோ, அரசியல் வாதிகளுக்குக் கிடையாது. அரசியல் வாதிகள் உசிதப்படி நடப்பார்களேயன்றி, உணர்வின்படி நடப்பதில்லை

—செஸ்ட்டர்ஃபீல்ட பிரபு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த பெ. எண் - 05

## அனுராவின் பழிவாங்கல்

அரசியற் தலைவர்களின் குத்துக் கரணங்கள், பாய்ச்சல்கள் 'ஜனநாயக நாடுகளில்' புதியதொன்றல்ல. அதிலும், தென்னாசிய நாடுகள் இதற்குப் பெயர் பெற்றவை வாக்கு வேட்டையின் போது மட்டுமே மக்களை நாடும் இவர்கள் பின்னர் அரசியலில் அடிக்கும் பல்டிகளும், தாவல்களும் பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவுமே இருக்குமே ஒழிய ஒருபோதும் மக்கள் நலன் கருதியதாக இருப்பதில்லை.

இந்த வரிசையிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்காவினதும், தற்போதைய சுதந்திரக் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் மகனான அனுரா பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமையும் ஆகும்.

கட்சியில் இருந்து அனுரா வெளியேற்றப்பட்டமைக்கு, கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாட்டை அவர் கடைப்பிடிக்கவில்லை என கட்சியின் தலைமை குற்றம் சாட்டலாம், கட்சியிலிருந்து தன்னை வெளியேற்றியமைக்கு கட்சித் தலைமையின் சர்வாதிகாரப் போக்கே காரணம் என அனுரா பண்டார நாயக்கா கூறலாம். இருதரப்பினரதும் குற்றச் சாட்டுக்கள் இவ்வாறே இருப்பதையே அவர்கள் வெளியிடும் அறிக்கைகளும் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால், உண்மையில் கட்சிக்குள் நடந்த அதிகாரப் போட்டியே சுதந்திரக் கட்சியில் இருந்து அனுராவை வெளியேற்றியது. அதாவது, கட்சிக்குள் நடந்த அதிகாரப் போட்டியில் அனுரா தோற்றுப் போனதால் வெளியேற்றப் பட்டார் என்பதே உண்மை.

கட்சியின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான அனுராவின் ஆசை 1978 இல் சிறிமாவோ பண்டார நாயக்கா குடியுரிமை இழந்த போதே வெளிப்பட்டது. ஆனால், அதில் தோல்வி கண்ட போதும், சுதந்திரக் கட்சியின் தலைமை தாயின் பின்னர் தனக்கு வாரிசு உரிமையின் அடிப்படையில் கிடைக்கும் என்ற நோக்கிலேயே அனுரா இருந்தார். ஆனால் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் பிரவேசமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான இணைவும், இவற்றுக்கான சிறிமாவோ பண்டாரநாயக்...

# அநுராவின் வெளியேற்றம் எதிர்க்கட்சிக்கு நல்ல சகுனம்

### - பேர்னாட் சொய்சா

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவின் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவது தொடர்பாக எடுத்த முடிவினால் எதிர்க்கட்சிக்கு ஒரு சிறுஅளவு தாக்கம் ஏற்பட்டாலும் அதனை எதிர்க்கட்சிகளின்கூட்டுக்கான ஒரு நல்ல சகுனமாகக் கருத வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சி தலைவர் பேர்னாட் சொய்சா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தனிப்பட்ட அநுரா மக்களின் செல்வாக்கை பெற்றுள்ள ஒருவர் இல்லை என்றும் இவரை சிலர் மட்டுமே சூழ்ந்துள்ளதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டுக்குள் உள்ள நட்புக்கு எந்த வகையிலும் பாதகம் ஏற்படப் போவதில்லை எனவும் கூறினார்.

''அநுராபண்டாரநாயக்கா ஆட்சியாளர்கள் சிலரின் ஆசை வார்த்தைக்கு உட்பட்டே மேற்படி தீர்மானத்தில் இறங்கியிருப்பதாக நான் கருதுகின்றேன்'' என தேசவிமுத்தி பெரமுனையின் நியூ பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனாவைத்தியசாலை

## 10 அமைய லிகிதர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் அமைய லிகிதர்களாக கடமையாற்றிய சுமார் பத்துப்பேரிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி பத்து பேரிற்கும் நிரந்தர நியமனம் வழங்கும் அனுமதிக் கடிதமொன்று நேற்று யாழ் போதனாவைத்தியசாலைக்கு மகளிர்விவகார போதனாவைத்தியசாலைகள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நிரந்தர நியமனம் பெறவுள்ளவர்களுக்கு தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

[பா] (நி)

## அதிகாரமற்ற மாகாணசபைக்கு பணத்தை செலவிடுவது ஏன்?

### சிறிமாவோ கேள்வி

[கொழும்பு]

அதிகார பரவலாக்கல் தொடர்பாகவும், வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காணும் நோக்குடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை தொடர்பாக ஜனாதிபதி டி. பி விஜேதுங்க அண்மையில் தெரிவித்த கருத்து பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேற்படி செய்கை வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் தீர்வு ஒன்று தொடர்பாக நம்பிக்கை கொள்ள முடியாத ஓர் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதிகாரம் இல்லாத மாகாண சபைகள் ஏன் உருவாக்கப்பட்டன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அதிகாரம் அற்ற மாகாணசபைக்கு கோடிக்கணக்கில் பணத்தை ஏன் செலவிட வேண்டும்? மாகாணசபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்த போது அதிகார பரவலாக்கல் அமுல் படுத்தப்பட்டது இது போன்ற கருத்து ஒன்றும் வெளியிடப்படவில்லை.

ஆனால் இன்று வடமேல், தென்மேற்கு, மாகாணங்களில் எதிர்க்கட்சியிடம் ஆட்சி வந்ததன் பின்னர் அதிகாரத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபடுகின்றார். மாகாண சபைக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அத்துடன் ஜனநாயக உரிமைகளுக்கு ஐக்கிய தேசிய கட்சியும் ஜனாதிபதியும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஓவிய, சிற்ப கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களின் ''ஓவிய, சிற்பக் கண்காட்சி'' நாளையாழ். கனகரத்தினம் ம. ம. வி. கலைக்கூடத்தில் காலை 10 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இக் கண்காட்சியை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திறந்து வைக்கவுள்ளார். தொடர்ந்து இக் கண்காட்சியை சனி, ஞாயிறு தினங்களும் பார்வையிட முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## பொதுக்கூட்டம்

தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ் பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். இதில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து பயிலுனர் நியமனம் பெற்றவர்களும், தற்போது தொண்டர் ஆசிரியர்களாககடமையாற்றுவோரும், தவறாது சமுகமளிக்குமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## மட்டு மாவட்டத்தில் மட்டும் 6000 விதவைகள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 6000க்குமேற்பட்ட பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று எடுத்துள்ள புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இப் பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது 6000க்கு மேற்பட்ட தொகையிலான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகவும் 17தொடக்கம் 25வயது வரையில் உள்ள பெண்கள் மட்டுமே இதில் அடங்குவார்கள் எனவும் அவ் அரச சார்பற்ற நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதே வேளை இப் பகுதியில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் சுமார் 10ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாக கொள்ள முடியும் என அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## எழுதுவினைஞர் சேவை நவ-1 இல்நேர்முக பரீட்சை

(நமது நிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த ஏனைய சேவைகளுக்குமான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவிக்கு ஏற்கனவே பலர் தெரிவு செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் கடந்த காலவன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைத் திட்டத்தின் கீழ் 92பேர் தெரிவு செய்யப்பட்டமைதெரிந்ததே. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சையே எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ச] [சி]

## தாளையடியில் தையல் பயிற்சி வகுப்பு

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை வடமராட்சி பிரதேச சபை செயலாளர் கிழக்குப் பிரிவு மூன்றாவது தொடர் தையல் பயிற்சி வகுப்பினைக் கடந்த செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி புதன் கிழமை தாளையடியில் ஆரம்பித்து வைத்துள்ளது.

## வீதி விளக்குகளுக்கென 5இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் தற்சமயம் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்ற வீதி விளக்குகளிற்கென சுமார் ஐந்து இலட்சம் ரூபா இந்த வருடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென சுமார் ஏழரை இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் இந்நிதியை ஒதுக்கித் தருமாறும் யாழ். மாநகர சபை மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது இதனை அடுத்தே மேற்படி நிதி மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந்நிதி மத்திய அரசு மாகாண அரசு ஊடாக யாழ். மாநகர சபைக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (பா)

## உடன் ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ்ப் பரீட்சை டிசம்பர் 1993இற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நாளையாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கு முகமாக கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கும் வண்ணம் பாடசாலைஅதிபர்களை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## திருப்பி அனுப்பும் திட்டத்தை சுவீடன் கைவிட்டது

(ஸ்ரொக்கோம்)

சுவீடனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்திருந்த... இராசா (38) ஆகிய இருவரும் கட்டுநாயக்காவில் இறங்கிய...

## காஷ்மீர் மாநில நிர்வாகத்துடன் இராணுவம் கருத்து முரண்பாடு

கட்சியில் இருந்து அனுரா வெளியேற்றப்பட்டமைக்கு, கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாட்டை அவர் கடைப்பிடிக்கவில்லை என கட்சியின் தலைமை குற்றம் சாட்டலாம், கட்சியிலிருந்து தன்னை வெளியேற்றியமைக்கு கட்சித் தலைமையின் சர்வாதிகாரப் போக்கே காரணம் என அனுரா பண்டார நாயக்கா கூறலாம். இருதரப்பினரதும் குற்றச் சாட்டுக்கள் இவ்வாறே இருப்பதையே அவர்கள் வெளியிடும் அறிக்கைகளும் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால், உண்மையில் கட்சிக்குள் நடந்த அதிகாரப் போட்டியே சுதந்திரக் கட்சியில் இருந்து அனுராவை வெளியேற்றியது. அதாவது, கட்சிக்குள் நடந்த அதிகாரப் போட்டியில் அனுரா தோற்றுப் போனதால் வெளியேற்றப் பட்டார் என்பதே உண்மை.

கட்சியின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான அனுராவின் ஆசை 1978 இல் சிறிமாவோ பண்டார நாயக்கா குடியுரிமை இழந்த போதே வெளிப்பட்டது. ஆனால், அதில் தோல்வி கண்ட போதும், சுதந்திரக் கட்சியின் தலைமை தாயின் பின்னர் தனக்கு வாரிசு உரிமையின் அடிப்படையில் கிடைக்கும் என்ற நோக்கிலேயே அனுரா இருந்தார். ஆனால் சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் பிரவேசமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான இணைவும், இவற்றுக்கான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஊக்கமும் அனுராவிற்கு எரிச்சலை ஊட்டின எதிர்காலத்தில் கட்சியின் தலைமை தனது கையை விட்டு நழுவிச் சென்றுவிடும் என்பதை அவர் உணரத் தொடங்கினார்.

இந் நிலையிலேயே கட்சிக்குள் முரண்பாடு தீவிரமானது. அனுரா தனித்து நிற்க தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவும், தமக்கையாரான சந்திரிகா குமாரணதுங்காவும் ஓரணியில் நின்றனர். இவ் உட்கட்சி பூசலை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் இருந்தே திறம்படக் கையாண்டு முரண்பாட்டை தீவிரமடையச் செய்தது. இறுதியில் அனுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்

இந் நிலையில் தான் அனுரா பண்டார நாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கான அறிவிப்பு வெளிவந்துள்ளது. அனுரா பண்டார நாயக்காவின் இம் முடிவானது- சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும், ஐக்கிய தேசிய கட்சிக்கு எந்தளவிற்கு லாபத்தை ஏற்படுத்தும் என்பவையெல்லாம் தற்பொழுது திடமாகக் கூறமுடியாது விட்டாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சில நட்டங்களும், சில லாபங்களும் இருக்கும் அதேவேளை, ஐ தே. கவிற்கு சிறிய அளவிலாகிலும் லாபம் உண்டு என்றே கூறலாம்.

இதேவேளை, அனுரா பண்டாரநாயக்காவை பொறுத்து எந்தளவிற்கு இது லாபகரமானது என்பது குறித்தும் பல கேள்விகள் உள்ளன. சுதந்திரக் கட்சி நீண்ட காலமாக அதாவது சுமார் 15 வருடங்களுக்கு மேல் எதிர்க் கட்சியாக இருப்பதினாலும், அடுத்த தேர்தலிலும் வெற்றி பெறுமா என்ற கேள்வி நிலவுவதால் எதிர்கால வெற்றியிலும் நம்பிக்கை இழந்து அவர் கட்சி மாற எண்ணியிருக்கலாம். இதன் மூலம் சிலவேளை ஒரு அமைச்சர் பதவி அனுராவிற்கு கிட்டலாம். அது அனுராவைப் பொறுத்து சில வேளை மகிழ்ச்சி ஊட்டக் கூடியதாகவும் இருக்கலாம்.

ஆனால், அனுராவைப் பொறுத்து அவர் சுதந்திரக் கட்சிக்குள் எதற்காகப் போட்டியிட்டாரோ அதாவது, கட்சித் தலைமை என்பது ஐ.தே.கவிற்குள் ஒரு போதும் அவருக்குக் கிடைக்கப் போவதில்லை. அத்தோடு, தனக்கு ஆதரவாக ஒரு பலமான அணியை ஐ. தே. கவிற்குள் அவரால் உருவாக்கவும் முடியாது. இந் நிலையில் அவரால் ஐ தே கவிற்குள், சுதந்திரக் கட்சிக்குள் இருந்தது போன்று இரண்டரம் மட்டத் தலைவராக கூட இருக்க முடியுமா என்பது கேள்வியே. இதனை அனுராவும் உணர முடியாமல் இருக்க முடியாது.

இந் நிலையில் அனுரா பண்டார நாயக்கா ஐ தே. கவிற்குள் இணைவதென்பது அவரது அரசியல் அபிலாசைகள் என்பதைவிட, தாய் மீதானதும், தமக்கையர் மீதான அரசியல் பழிவாங்கல் முயற்சி என்றே கூற வேண்டும். ஆனால், இதற்கான பதிலும் அனுராவிடம் இல்லை. சிங்கள மக்களிடமே உள்ளது என்பதே உண்மை.

---

...த்து பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேற்படி செய்கை வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் தீர்வு ஒன்று தொடர்பாக நம்பிக்கை கொள்ள முடியாத ஓர் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அதிகாரம் இல்லாத மாகாண சபைகள் ஏன் உருவாக்கப்பட்டன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

...இது போன்ற கருத்து ஒன்றும் வெளியிடப்படவில்லை.

ஆனால் இன்று வடமேல், தென்மேற்கு, மாகாணங்களில் எதிர்க்கட்சியிடம் ஆட்சி வந்ததன் பின்னர் அதிகாரத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபடுகின்றார். மாகாண சபைக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அத்துடன் ஜனநாயக உரிமைகளுக்கு ஐக்கிய தேசிய சட்சியும் ஜனாதிபதியும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

...கின்றது. (பா)

## பொதுக்கூட்டம்

தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ் பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும். இதில் தொண்டர் ஆசிரியர் களாக இருந்து பயிலுனர் நியமனம் பெற்றவர்களும், தற்போது தொண்டர் ஆசிரியர்களாககடமையாற்றுவோரும், தவறாது சமுகமளிக்குமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## உடன் ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ்ப் பரீட்சை டிசம்பர் 1993இற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை நாளையாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கு முகமாக கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கும் வண்ணம் பாடசாலைஅதிபர்களை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

...திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென சுமார் ஏழரை இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் இந்நிதியை ஒதுக்கித் தருமாறும் யாழ். மாநகர சபை மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது இதனை அடுத்தே மேற்படி நிதி மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந்நிதி மத்திய அரசு மாகாண அரசு ஊடாக யாழ். மாநகர சபைக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுள்ளது. (பா)

## திருப்பி அனுப்பும் திட்டத்தை சுவீடன் கைவிட்டது

(ஸ்ரொக்கோம்)

சுவீடனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட இலங்கை தமிழ் அகதிகளை நாடு கடத்துவ வதென சுவீடன் அரசு தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்து தமிழ் அகதிகள் நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து நாடு கடத்தும் திட்டத்தை சுவீடன் ஒத்திவைத்துள்ளது.

சுவீடன் வெளிநாட்டு திணைக்கள அதிகாரிகளுக்கும் அகதிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே நாடு கடத்தும் திட்டத்தை சுவீடன் ஒத்திவைத்துள்ளது.

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட 18 பேரை சுவீடன் அரசு தற்போது தடுத்து வைத்துள்ளது. கடந்த 5ஆம் திகதிஇலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்ட இரத்தினம் ஆனந்தரூபன் (15), சின்னையா இராசா (38) ஆகிய இருவரும் கட்டுநாயக்காவில் இறங்கியதும் சிறிலங்கா பொலிசாரால் அவர்கள் கைதாகி நீர்கொழும்பு சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இந் நிலையிலேயே சுவீடனில் ஓரிப்ரோ நகரில் இலங்கை அகதிகள் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தனர்.

செவ்வாயன்று நடைபெற்ற பேச்சுக்களில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மீள் பரிசீலனை செய்ய இணங்கிய சுவீடன் அதிகாரிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை நாடு கடத்தும் நடவடிக்கையை ஒத்திவைக்க இணங்கினர்.

இவ்விவகாரத்தை சுவீடன் பாராளுமன்றத்தில் விவாதிக்கவும் இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை ஆராய்ந்து அறிய நடவடிக்கை எடுப்பது என்றும் இப் பேச்சுகளின்போது இணக்கம் காணப்பட்டது.

## அகதிகளிடமிருந்து பறிமுதலான படகுகள் மீளளிக்கப்படும்

(டில்லி)

இலங்கை அகதிகள் இந்தியாவிலிருந்து தமது தாயகம் திரும்பும் போது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை அவர்களிடமே மீண்டும் ஒப்படைத்து விடுவது என இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கை அகதிகளிடமிருந்து வெளியான கோரிக்கைகளை அடுத்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அகதிகளாக வந்த இவர்கள் பயணம் செய்த படகுகளை இந்திய சுங்க வரி சட்டத்தின் கீழ் இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்திருந்தமை தெரிந்ததே.

## பாலஸ்தீனியர்களை விரைவாக விடுதலை செய்யவும்

(டெல்அவிவ்)

இன்னமும் காவலில் வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனியர்களை இயன்றளவு விரைவாக இஸ்ரேல் விடுவித்துவிடவேண்டும் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. காஸாப் பகுதி மற்றும் ஜெரிக்கோ நகரத்திற்கு வரையறைக்குட்பட்ட சுயாட்சி வழங்குவது தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமான போது பாலஸ்தீன விடுதலை இயக்கம் இக் கோரிக்கையை விடுத்தது.

ஆனால் குற்றம் இழைக்காதவர்களின் விடுதலை பற்றி மட்டுமே இஸ்ரேல் ஆராயும் என்று இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

## காஷ்மீர் மாநில நிர்வாகத்துடன் இராணுவம் கருத்து முரண்பாடு

### புதுடில்லி பத்திரிகைகள் தகவல்

(டில்லி)

சிறிநகரில் ஹர்சத் பல் மசூதியை இராணுவம் முற்றுகையிட்டிருப்பது தொடர்பாக ஜம்மு காஷ்மீர் மாநில நிர்வாகத்திற்கும், இராணுவத்திற்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக புதுடில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் இச் செய்திகளை மறுத்துள்ள உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் உள்ளூர் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் இணைந்து நிலைமையை சமாளித்து வருவதாகவும், இந்த முற்றுகை தொடர்பாக ஏற்பட்டுள்ள தேக்க நிலையை போக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

முற்றுகை இன்னும் எத்தனை நாட்கள் வரை நீடிக்கலாம் என்று நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஹர்சத் பல் தேக்க நிலையை போக்க நிச்சயமான காலக்கெடு எதுவும் இல்லை எனவும் பேச்சுகள் நடத்துவதைப் பொறுத்து தீர்வு ஏற்படும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

ஹர்சத் பல்மசூதியை பாதுகாப்பது அரசின் முக்கிய நோக்கம் என்றும் இல்லாவிட்டால் அந்த தர்காவினுள் இராணுவம் எப்போதோ புகுந்திருக்கும் எனவும் பிறிதொரு கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த தர்காவினுள் அடைக்கலம் புகுந்துள்ள ஆயுதபாணிகள் பாதுகாப்பாக வெளியேற இராணுவம் அனுமதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்திருப்பது தொடர்பாக கண்டனம் தெரிவித்தார்.

## அத்வானி குற்றச்சாட்டு

ஜம்மு காஷ்மீரில் ஹர்சத் பால் மசூதியை இந்திய இராணுவம் முற்றுகையிட்டதன் மூலம் காஷ்மீர்பிரச்சினை சர்வதேசபிரச்சினை போலப் பேசப்படுவதற்கு இந்திரா காங்கிரஸ் வழிவகுத்து விட்டது என்றும், இது அரசின் தவறான கொள்கை என்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார்.

## தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க. விலகலாம்?

(சென்னை)

ஜனதா தள் கட்சியின் பல்வேறு பிரிவுகளும் இணைந்துள்ளதைத் தொடர்ந்து தேசிய முன்னணியிலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் விலகுமா என்பது குறித்து இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான மு. கருணாநிதி கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜனதா தளத்துடன் முன்னாள் பிரதமர் எஸ். சந்திரசேகர் தலைமையிலான சமாஜவாதி ஜனதாக்கட்சி இணையும் என்பதை தான் எதிர்பார்க்கவில்லை என்றும், தெரிவித்தார். எனினும் இது பற்றிக் கட்சியே முடிவெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

சந்திரசேகர் பிரதமராக இருந்த போது தான் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது தெரிந்ததே.

## அமெ. ஜனாதிபதியின் யுத்த அதிகாரம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் யுத்தம் நடத்தும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் திருத்தம் அமெரிக்க செனட் சபையினால் 65 - 33 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஐ. நா. அல்லது வேறுநாட்டுத் தலைமையின் கீழ் அமெரிக்கப் படைகள் காங்கிரஸின் அனுமதியின்றி யுத்தம் புரிவதால் அதற்கான செலவை மறுக்க இந்தத் திருத்த பிரேரணை வழி செய்கிறது.

அமெரிக்கஜனாதிபதி கிளின்ரன் செனட் சபையின் இந்தப் பிரேரணையை வன்மையாகக் கண்டித்துள்ளார். வெளிநாட்டுத் தலைமையின் கீழ் அமெரிக்கத் துருப்புகளை போருக்கு அமர்த்துவதானால் ஜனாதிபதி காங்கிரசுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

வீட்டுக்கு அழகு வேம்பம் மரம்

# திருமண வாழ்த்து

அன்புடையீர்!

எனது சகோ;தரனாகிய
ஸ்ரீ முத்துமாரியம்மன் (மாத்தளை) தேவஸ்தான
பிரதம அர்ச்சகர்
**சுப்பிரமணியக் குருக்கள் சிவானந்தசர்மாவுக்கும்**
கீரிமலையைச் சேர்ந்த
**தண்டாயுதபாணிக்குருக்கள் சுகந்திக்கும்**

இன்று வியாழக்கிழமை [28-10-1993] காலை 9 மணி முதல் 11.34 இல் வரும் சுபவேளையில் நடைபெறும் திருமண வைபவம் சிறப்புறவும் மணமக்கள் நீடுழி வாழவும் கலட்டியம்மன் அருள்வேண்டி நிற்கும்.

திரு. திருமதி வை. கருணாகரேஸ்வரக்குருக்கள்
(கலட்டியம்மன் பிரதமகுருக்கள்)
ஸ்ரீனிவாசசர்மா - கிருஷ்ணானந்தி தம்பதிகள்
க. ஆனந்தகுமாரசர்மா
க. கருணா நந்தகுமாரசர்மா
க. தமயந்தி
ஸ்ரீவர்ஷா
எம். சுரேந்திரன்

கலட்டி அம்மன்
தேவஸ்தானம்.

[சி|7794]

# முதலாவது பிறந்த நாள்
## 28.10.1993



## செல்வி சரணிகா

சர்வலோகராசா - செந்தமிழ்ச்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி சரணிகா தனது முதலாவது பிறந்த நாளை 28-10-1993 (இன்று) நல்லூரில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா (அன்னலச்சுமி), அம்மப்பா (பத்மநாதன்), அப்பம்மா. பிரான்சிலிருக்கும் ஆசையம்மா, ஆசையப்பா, அக்கா நிருத்திகா, மாமாமார் அன்ரா (கோதா), பெரியப்பா குடும்பத்தினர் ஆகியோர் நல்லூர் முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

102/1, கோவில் வீதி,

# நீர்கொழும்பு இளைஞர் படுகொலை 'ஜிகாத்'தின் வேலை என சந்தேகம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் மர்மக் கடத்தல்களுக்கும் படுகொலைகளுக்கும் முஸ்லிம் தீவிரவாத இயக்கமான 'ஜிகாத்' அமைப்பே காரணம் என கொழும்பில் பரவலாக பேசப்படுகிறது.

அண்மையில் நீர்கொழும்பு பகுதியில் நடைபெற்ற இரு தமிழ் இளைஞர்களின் படுகொலைகள் மற்றும் முஸ்லிம் வர்த்தகர் கொலை ஆகியவை இவ் அமைப்பின் வேலையே என தெரியவருகிறது.

இதேவேளை அண்மையில் கொழும்பு வங்கி ஒன்றில் இடம்பெற்ற 15 லட்ச ரூபா கொள்ளையும் இவர்களது வேலையே என தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும் அதனை சூழவுள்ள நகரங்களிலும் மேற்படி அமைப்பு மறைமுகமாக செயற்பட்டு வருவதுடன் தீவிரமாக வளர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோத சாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

சட்ட விரோதமாக வடிசாராயம் வைத்திருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கரணவாய் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த கி. விஜயதாஸ் என்பவர் வல்வெட்டித்துறை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதியாளர் இவருக்கு 8 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் தவறினால் ஆறு மாதம் கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கினார். குற்றத்தை ஒப்புக்கொண்ட நபர் குறிப்பிட்ட குற்றப்பணத்தை செலுத்தினார். (யோ)

# மிகப் பெரிய ஆபத்தை சிங்கள இனம் எதிர்கொள்கிறது

மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

"இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் சிங்கள இனம் மிகப் பெரிய ஆபத்தை தற்போது எதிர் கொள்கின்றது. இந்த நிலை தொடருமானால் சிங்கள இனம் அழியும். எனவே இது குறித்து நாம் மிக அவதானமாக செயற்பட வேண்டும், என மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை தொடர்பாக ஆராயும்போது மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில் இன்று சிங்கள இனம் அனாதரவான நிலையில் உள்ளது. தமிழர் நாட்டின் எந்த பகுதியிலும் சீவிக்கவோ அல்லது சுய தொழில்களை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால் சிங்களவர் வடக்கே செல்லவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் கிழக்கு மாகாணத்திலும் இன்று வடக்கில் உள்ள நிலை ஏற்படும் வடக்கு கிழக்கில் சிங்களவர்கள் சென்று குடியேறும் உரிமை இருக்க வேண்டும். திருக்கோணமலையில் கடற்தொழில் அமைச்சு அமைந்ததினால் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. எனவே சிங்கள மீனவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

இலங்கையைச் சுற்றியுள்ள கடலின் பெரும்பகுதி ஆதிக்கம் இன்று பிரபாகரன் கையில் தான் உள்ளது. எனவே அவ் ஆதிக்கத்தை மீண்டும் நாம் கைப்பற்ற வேண்டும் என்றார்.

அநுராவின்

தாது. இது பிரதான பிரச்சினையை திசைதிருப்பும் ஒன்றே என பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியிருப்பதாக ராய்ட்டர் தெரிவித்தது.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 27.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11452

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-7230, 40 4760, 26-4896, 26 5157, 42 2432
27-5481, 28 4545, 40-7299, 24-6941, 24 5509
26-7440.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0560, 24-6489, 24-9489, 24-4390, 24-3063
26-4436, 24-7327, 26 7252, 27 7263, 27-2761
40-9188, 26-2585, 27-6063, 24 5679, 27-0493
26-7068, 26-6628, 28-1414, 24-4361, 27 9090
28-2049, 26-5202, 41-7563.

வீடியோ

வர்.

தணிக்கைக் குழுவில் கிறிஸ்தவ பாதிரியார், இந்துக்குரு, பெண், இலக்கிய கர்த்தா, போராளி ஆகியோர் அங்கம் வகிப்பர்.

வீடியோப் படங்கள் பார்ப்போர் பின்வரும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர்

1. மாணவர்களின் படிப்பின் நிமித்தமும், நோயாளிகளின் நலன் கருதியும் இரவு 10.00 மணிக்குப் பின்னர் வீடியோப் படங்கள் பார்த்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ் அறிவுறுத்தலை ஒவ்வொரு வீடியோ நிலையங்களிலும் அவ் நிலையத்தினர் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

2. பாலியல் உடலுறவு சம்பந்தமான உலக விதிமுறைக்குள் தடைசெய்யப்பட்ட படங்களை பார்ப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை தமிழீழக் காவல் துறையினரால் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு

மேலும் ஆயுதங்கள் சகிதம் திடீரென பஸ்களுக்குள் ஏறும் பொலிசார் பயணிகளிடம் அடையாள அட்டைகளை வாங்கி பரிசீலிப்பதுடன் அதில் தமிழர்களாக காணப்படுவோர் வயது வேறுபாடின்றி இறக்கப்பட்டு பொலிஸ் வாகனங்களில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(ச) (சி)

# அதிர்ச்சி நோய் எமக்கல்ல நூல் நேற்று வெளியீடு

திரு. நாக.பத்மநாதன் அவர்கள் எழுதிய உருவகக் கதைகளின் தொகுப்பான 'அதிர்ச்சி நோய் எமக்கல்ல' என்கின்ற நூல் நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்புற வெளியிட்டு வைக்கப்பட்டது.

நேற்று மாலை 5 00 மணியளவில் ஆரம்பமாகிய இந் நிகழ்விற்கு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமை தாங்கினார்

இந்நூலை அ. யேசுராசா அவர்கள் வெளியிட்டு வெளியீட்டுரையை நிகழ்த்தினார். இதன் முதல் பிரதியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் வழங்க அதை திருமதி சிவஞானசுந்தரம் பெற்றுக் கொண்டார்.

இதனை அடுத்து மதிப்பீட்டுரைகளை பேராசிரியர் அ. சண்முகதாஸ், சோ. பத்மநாதன், பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் ஆசிரியர் திரு. நாக. பத்மநாதன் அவர்களின் நன்றியுரையை அடுத்து நிகழ்வு இனிது நிறைவேறியது. (பா)

# போட்டிகள்

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினால் நவராத்திரி நடன, இசைப்போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில நடைபெற உள்ளது.

உதைபந்தாட்ட
போட்டி

யாழ்ப்பாண மாவட்ட உதை பந்தாட்ட சபையின் மாவட்ட மட்டப் போட்டிகளுக்காக வலிகாமம் மேற்கு உதை பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித்தொடரின் இன்றைய ஆட்டத்தில் கலைவாணி அணியை எதிர்த்து அராலி ஏ எஸ். அணியும் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து இணுவில் கலா அணியும் விளையாடவுள்ளன போட்டிகள் மூன்று மணிக்கு ஆரம்பமாகும்.

கட்டடக்கலை

மொறட்டுவப் பல்கலைக் கழகப் பதிவாளர் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே. விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளையும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பதாரிகள் பார்வையிடலாம்.

உயர்கல்வி

இவ் ஊர்வலத்தின்போது அகதிகளுக்கான ஐ நா யாழ். வதிவிடப் பிரதிநிதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி, யாழ். அரசாங்க அதிபர், பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளன இம் மகஜர்

# நூல் வெளியீடு

காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களின் 'காவேரி' எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3. 30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

சிறிலங்கா

லங்கா இராணுவ உயரதிகாரிகளும் கூட தற்போது அரசை விமர்சிக்க தொடங்கிவிட்டனர் சிங்களவர்கள் தம் உறவினர் பிணமாக திரும்புவதை பார்த்து சலித்து விட்டனர். தற்போது படையில் புதிதாக சேர்க்கப்படுபவர்கள் எழுத வாசிக்க தெரியாதவர்கள், பொருளாதார ரீதியில கஷ்டப்படுபவர்கள்.

தற்போதைய இராணுவ ஆட்சேர்ப்பு வீதிகளில் இருந்து ஆட்திரட்டல் போன்றுள்ளது என முன்னாள் சிறிலங்கா விமானப்படை தளபதி கூறுகிறார். பெயர் கூறவிரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் ஐ. பி. எஸ் செய்தி நிறுவனத்திடம் கருத்து கூறுகையில் தாம் புலிகளுக்கு எதிரான ஒரு பாரிய தாக்குதலை நடத்தவோ அல்லது புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை கைப்பற்றவோ முடியாமல் உள்ளதாகவும் பதிலாக தெற்கு மக்களின் தாக்கத்தை குறைக்க புலிகளின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலடியாக யாழ்ப்பாணத்தில் விமானக் குண்டு வீச்சை நடத்துவதாகவும் ஒட்டுமொத்தத்தில் இது பழிவாங்கும் செயற்பாடே என கூறியுள்ளார்.

இராணுவம் தொடர்ந்து போரிடும் மனத்திடம் இல்லாதவர்களாகவும் அதே சமயம் போதிய பயிற்சி இல்லாதவர்களாகவும், உயர் அதிகாரிகள் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவும் உள்ளனர்.

இது போரில்சிறிலங்காபடைகளைத் துவிட்டது என்பதையே தெளிவாக்குகிறது என்று அப்பத்திரிகை கூறுகிறது.

மின்னல்

இதேவேளை நேற்று பிற்பகல் 1-45 மணியளவில் வண்



# செல்வி சரணிகா

சர்வலோகராசா - செந்தமிழ்ச்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி சரணிகா தனது முதலாவது பிறந்த நாளை 28-10-1993 (இன்று) நல்லூரில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா (அன்னலச்சுமி), அம்மப்பா (பத்மநாதன்), அப்பம்மா, பிரான்சிலிருக்கும் ஆசையம்மா, ஆசையப்பா, அக்கா நிருத்திகா, மாமாமார் அன்ரா (கோதா), பெரியப்பா குடும்பத்தினர் ஆகியோர் நல்லூர் முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

103/1, கோயில் வீதி,
நல்லூர். (6405)

---

## பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நடாத்தும் மாபெரும்

# ஆர்ப்பாட்டப் பேரணி

## இன்று நாங்கள் நாளை நீங்கள்?

இன்று காலை 9 மணிக்கு

**யாழ். பல்கலைக்கழக முன்றலுக்கு**

## வசந்தத்தின் முழக்கமாய்ப் புறப்பட்டு வாரீர்

பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம்

(சி/7797)

---

## அன்பான வேண்டுகோள்!

18-10-93 அன்று பூநகரியில் இருந்து கிளாலிக்கரை நோக்கி பயணம் செய்கையில் முக்கிய பொருள்களும் எனது கடமை தொடர்பான முக்கிய தஸ்தாவேதுக்களும் அடங்கிய பிரயாண பையினை சின்னப்பு சிவபாலசுப்பிரமணியம் ஆகிய நான் தவறவிட்டுவிட்டேன். இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாண காரியாலயத்தில் அல்லது சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்

(சி-7767)

---

களை மேற்கொள்ளக் கூடிய தாக உள்ளது. ஆனால் சிங்களவர் வடக்கே செல்லவே முடியாத நிலை ஏற்பட்டுள் ளமையை நிசை நிரூபிப்பும் ஒன்றே என பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியிருப்ப தாக ராய்ட்டர் தெரிவித்தது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1/452

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-7230, 40 4760, 26-4896, 26 5157, 42 2432 27-5481, 28 4545, 40-7299, 24-6941, 24 5509 26-7440.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0560, 24 6489, 24-9489, 24-4390, 24-3063 26-4436, 24-7327, 26 7252, 27 7263, 27-2761 40-9188, 26-2585, 27-6063, 24 5679, 27-0493 26-7068, 26-6628, 28-1414, 24-4361, 27 9090 28-2049, 26-5202, 41-7563.

---

## 2-ம் ஆண்டு வீர அஞ்சலி

தாயவள் மடியில்
30
—
04
—
1975



தாயக மீட்சில்
27
—
10
—
1991

## 2-ம் லெப். நிலா

(நிர்மலாதேவி கிருஷ்ணபிள்ளை)

குருமண்வெளி, மட்டக்களப்பு

புயலெழுந்தாடும் பூமியிலே
புலியாகி எழுந்தவளே,
கலைபிறந்த மண்ணிலே
களமாடி மடிந்தவளே
நேற்றுப் போல...
நீ மறைந்து ஈராண்டுகளோ?
தென் தமிழீழமதில்
பெண் வேங்கைகளின்
முதல் வித்து நீ!
கானகத்து மரங்களும்
கனத்த உன் கருவியும்
உன்கதை கூறிக்கொள்ள
என்றும் நினைவில் அழியாத
உன் கனவுகளைச் சுமந்தபடி
ஆற்றுவழி தாண்டி அணி நடந்தோம்
நேராக நிமிர்ந்தபடி-எமது
தேசம் நிமிர்வதற்காய்.

—சகோதரி, தோழிகள்.

(சி/7796)

---

பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

2. பாலியல் உடலுறவு சம்பந்தமான உலக விதிமுறைக்குள் தடை செய்யப்பட்ட படங்களை பார்ப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை தமிழீழக் காவல் துறையினரால் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### கொழும்பு

மேலும் ஆயுதங்கள் சகிதம் திடீரென பஸ்களுக்குள் ஏறும் பொலிசார் பயணிகளிடம் அடையாள அட்டைகளை வாங்கி பரிசீலிப்பதுடன் அதில் தமிழர்களாக காணப்படுவோர் வயது வேறுபாடின்றி இறக்கப்பட்டு பொலிஸ் வாகனங்களில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(ச) (சி)

---

### நீதி நிர்வாக

பாதுகாக்க எம் போராளிகள், பொதுமக்கள் பல அர்ப்பணிப்புகளை செய்துகொண்டு இருக்கின்றார்கள். இவ்வளவு பிரச்சினைகளின் மத்தியிலும் எம் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காமல் இருக்க எமது தாயகத்தின் அடித்தள கட்டுமான வேலைகளையும் எங்கள் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் செய்து கொண்டு இருக்கின்றார். இச்சேவையின் அடிப்படையாகக்கொண்டே காவல்துறை, நீதிமன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

இந் நீதிமன்ற நிர்வாக நடவடிக்கைகளில் தொடர்புடையவர்கள் விருப்பமுள்ளவர்களில் சமாதான நீதிபதிகள், மொழிபெயர்ப்பாளர்கள், நில அளவையாளர்கள் அவ்வப் பகுதியில் இயங்கும் நீதிமன்றங்களில் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம்.

நில அளவையாளர்களுக்குரிய கட்டணம் நில அளவையாளர் சங்கம் தீர்மானித்த கட்டணத்தின் அடிப்படையில் அறவிடப்படும். மொழி பெயர்ப்பாளர்கள் மொழி பெயர்ப்புக் கட்டணமாக ஒரு பக்கத்திற்கு ஆகக்கூடியதாக ரூ.30/- பெற்றுக்கொள்ளலாம். சமாதான நீதிபதிகள் என்ற பெயர் கண்ணியமானது. அவர்கள் அத்தாட்சிப்படுத்தும் எந்த ஆவணத்திற்கும் பணம் அறவிடுவதில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் 15-11-93-ம் திகதிக்கு முன்னர் எடுத்துக்கொள்ளமுடியுமென்றும் கூறினார்.

மேற்படி கலந்துரையாடலில் நில அளவைப் பொறுப்பாளர் திரு. புவியரசன் அவர்களும் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினார்.

---

எதிர்த்து இறுவில் கலா அணியும் விளையாடவுள்ளன போட்டிகள் மூன்று மணிக்கு ஆரம்பமாகும்.

---

### கட்டடக்கலை

மொறட்டுவப் பல்கலைக் கழகப் பதிவாளர் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளையும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பதாரிகள் பார்வையிடலாம்.

---

### உயர்கல்வி

இவ் ஊர்வலத்தின்போது அகதிகளுக்கான ஐ நா யாழ். வதிவிடப் பிரதிநிதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரதிநிதி, யாழ். அரசாங்க அதிபர், பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளன இம் மகஜர்கள் மேற்படி பிரதிநிதிகளூடாக சிறிலங்கா ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. இதில் அரசின் திட்டமிட்ட மேற்படி நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கையொப்பமிட்டிருப்பது குறிப்பித்தக்கது.

(ச, சி, 07)

---

மல் உள்ளதாகவும் பதிலாக தெற்கு மக்களின் தாக்கத்தை குறைக்க புலிகளின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலடியாக யாழ்ப்பாணத்தில் விமானக் குண்டு வீச்சை நடத்துவதாகவும் ஒட்டுமொத்தத்தில் இது பழிவாங்கும் செயற்பாடே என கூறியுள்ளார்.

இராணுவம் தொடர்ந்து போரிடும் மனத்திடம் இல்லாதவர்களாகவும் அதே சமயம் போதிய பயிற்சி இல்லாதவர்களாகவும், உயர் அதிகாரிகள் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவும் உள்ளனர்.

இது போரில்சிறிலங்காபடைகளைத் துவிட்டது என்பதையே தெளிவாக்குகிறது என்று அப்பத்திரிகை கூறுகிறது.

---

### மின்னல்

இதேவேளை நேற்று பிற்பகல் 1-45 மணியளவில் வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியிலுள்ள கோட்டையம்பதி முருகன் ஆலயப்பகுதியில் மின்னல் தாக்கியதில் ஆலயப் பின்சுவர் பலத்த சேதமடைந்ததுடன் அருகிலுள்ள வீடும் சேதம் அடைந்தது.

இப் பகுதிகளில் இருந்த மக்கள் ஏறிகணைவீச்சென எண்ணி பெரும் பீதியடைந்து காணப்பட்டனர். (சி)(07)

---

## மரண அறிவித்தல்

# வயிரமுத்து குமாரசாமி

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது 27/6 வைமன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய வயிரமுத்து குமாரசாமி 27-10-93இல் காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான கமலாட்சி, மாணிக்கம் ஆகியோரது அன்புக் கணவரும், பரிமளம், காலஞ்சென்ற துரைராசா, அருளையா (சிறாப்பர் கச்சேரி, யாழ்ப்பாணம்), இராசரட்ணம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பையா (மினிபஸ் உரிமையாளர்), முத்துமாரி, சிவகாமசுந்தரி, யோகம்மா [ஆசிரியை செங்குந்தா இந்துக்கல்லூரி] ஆகியோரின் மாமனாரும், முத்துக்குமாரு, காலம்சென்றவர்களான சுப்பிரமணியம், சரவணமுத்து, நல்லதம்பி, செல்லத்துரை, ஐயாத்தைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சின்னம்மா கந்தையா, துரைசுவாமி, வீரசிங்கம் ஆகியோரினது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-10 93 வியாழக்கிழமை பகல் 11-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

27/6, வைமன் வீதி,
நல்லூர்.

தகவல்:
த. சுப்பையா
(மருமகன்)

(ஈழநாதம் அருகாமையில்)
(6410)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது